People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**12.2.2011**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**அண்ணாசாலை**
**சென்னை 60002**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

**மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.**

**மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.**

**எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 05.2.2011 முதல் 11.2.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.**

**5-2-2011 முதல் 11-2-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 2 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 36 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 5 |
| 5. | வகுப்பறை வன்முறை | 8 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 5 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 3 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | – |

| | | |
|---|---|---|
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 9 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | 4 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பொதுவானவை | 10 |
| | மொத்தம் | 86 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-6
# 05. 2.2011 முதல் 11.2.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 389. | 5.2.2011 | **சென்னை மாவட்டம்:** வண்ணாரபேட்டை காலிங்கராயன் தெருவைச் சேர்ந்த பிரேம்குமார்(40). அதே பகுதியைச் சேர்ந்த செல்வம் இருவருக்கும் பணத்தகராறு காவல் நிலையத்தில் புகார். பிரேம்குமார் பணத்தை திருப்பி செலுத்திய பின் கடன் பத்திரம், ஆவணங்கள் அனைத்தும் செல்வத்திடம் இருந்து வாங்கிய எஸ்.ஐ., ஜெயக்குமார் பத்திரத்தை திருப்பித் தர பிரேம்குமாரிடம் ரூபாய் 1500 லஞ்சம் கேட்டதாக எஸ்.ஐ ஜெயக்குமார் மீது புகார். | லஞ்சம் | தினமலர் |
| 390. | 5.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் அடுத்த செவ்வாப்பேட்டை காவல் நிலையத்திற்குட்பட்ட சிறுகடல் கிராமத்தைச் சேர்ந்த அமுல்ராஜ்(38) மனைவி ஷகீலா(28). மனைவி மீது சந்தேகம் கொண்ட கணவர் மற்றும் குடும்பத்தார் ஷகிலாவை தனியறையில் அடைத்து சித்திரவதை செய்ததாக கணவன் மீது ஷகீலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 391. | 5.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை சுரண்டை அருகே இடையர்தவணையைச் சேர்ந்த மாடசாமி மகள் செல்வி(20) அகரக்கட்டையைச் சேர்ந்த பாஸ்டின்(23). இருவரும் காதலித்தனர். பாஸ்டின் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக பாஸ்டின் மீது செல்வி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 392. | 5.2.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி ஒன்றியம் தருமத்துப்பட்டி அரசு உயர்நிலைப் | வகுப்பறை வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பள்ளியில் 272 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். தலைமை ஆசிரியர் உட்பட 8 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். குடிநீர், சத்துணவுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை எனவும் கணினி இருந்தும் ஆசிரியர்கள் இல்லாததால் தங்கள் படிப்பு பாதிக்கப்படுவதாகவும் மாணவ, மாணவிகள் புகார். | | |
| 393. | 5.2.2011 | **அரியலூர் மாவட்டம்:** ஜெயங்கொண்டம் அடுத்த உடையார்பாளையத்தைச் சேர்ந்த 6ம் வகுப்பு மாணவி(11)யை, அதே பள்ளியின் ஆசிரியர் மோகன்தாஸ்(38) சில்மிஷம் செய்ததாக ஆசிரியர் மீது மாணவி புகார். | வகுப்பறை வன்முறை | தமிழ்முரசு |
| 394. | 6.2.2011 | **சென்னை மாவட்டம்:** நெல்லிக்குப்பம், கைலாசநாதர் கோவில் பகுதியில் உள்ள சுயஉதவிக் குழுவினரிடம் பாதுகாப்பு இயக்கம் மூலம் கடனுதவியும், நலத்திட்ட உதவிகளும் வழங்க ஒவ்வொரு குழுவும் 5,000 ரூபாய் கட்டினால் தனிநபருக்கு 25 ஆயிரம் கடன் தருவதாக ஏமாற்ற முயன்ற மூன்று பெண்களை கிராம மக்கள் முற்றுகையிட்டனர். | ---- | தினமலர் |
| 395. | 6.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, கீழ்ப்பாக்கம், கெல்லிஸ் ஏ.கே.சாமி ஆறாவது தெருவைச் சேர்ந்த காஜா மகன் முகமதுஹசன்(21) ஹசனை கடத்தி 1.5 கோடி ரூபாய் கேட்டு மிரட்டிய ராமநாதபுரத்தைச் சேர்ந்த வாஞ்சிநாதன்(29) ராஜவிக்னேஷ், ராஜ்குமார்(34), முத்துக்கருப்பு(21), விக்னேஷ், முத்துக்குமார்(27) ஆகிய 6 பேர் கைது. | கடத்தல் | தினமலர் |
| 396. | 6.2.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுச்சேரி காலாப்பட்டு மத்திய சிறையில் ஆயுள் கைதி அப்பாராசு இறந்ததையடுத்து சிறையில் கைதிகள் காலவரையற்ற உண்ணாவிரதம். கைதிகள் சிறையில் உணவு தயாரிக்க மறுப்பு. | சிறைச்சாலை வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 397. | 6.2.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி திரு.வி.க., நகர் பழை இரும்பு வியாபாரி பிரதீப்(35) அவரது தோழி ஜாக்குலின்(25). இருவரையும் கடத்திச் சென்றனர். பயைழ இரும்பு வியாபாரத்தில் பிரதீப் 3 லட்சம் ருபாய் பாக்கி தராததால் வியாபாரிகள் தண்டபாணி(35) ராதாகிருஷ்ணன்(22) இருவரும் பிரதீப், அவரது தோழி ஜாக்குலின்(25)னை கடத்தியதாக இருவரும் கைது. | கடத்தல் | தினமலர் |
| 398. | 6.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை திருப்புவனம் அருகே செல்லப்பனேந்தல் ஆற்றில், மதுரை காவலர்கள் மணல் திருடுவதாக புகார். | மணல் கொள்ளை | தினத்தந்தி |
| 399. | 6.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேசுவரம் அருகே உள்ள தெற்குவாடி பகுதியைச் சேர்ந்த நாட்டு படகு மீனவர்கள் நடுக்கடலில் மீன்படித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் அனைத்து படகுகளையும் விரட்டியடித்தோடு மீனவர்களை தாக்கி வலைகளை அறுத்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 400. | 6.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சம்பக்குளம் பகுதியைச் சேர்ந்த சிதம்பரம் மனைவி நாச்சம்மை. கணவர் மற்றும் அவரது உறவினர்கள் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக நாச்சம்மை புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 401. | 6.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே குருவித்துறை வைகையாற்றில் மணல் திருட்டில் ஈடுபட்ட லாரியை தடுத்து நிறுத்த முயன்ற எஸ்.ஐ கோதண்டராமன் மீது லாரியை ஏற்றிக் கொல்ல முயன்ற எழுவம்பட்டியைச் சேர்ந்த ராஜாவை(33) கைது செய்தனர். | மணல் கொள்ளை | தினகரன் |
| 402. | 7.2.2011 | **மதுரை மாவட்டம்:** | பெண்கள் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதுரை சிம்மக்கல் வடக்கு லைன் 3 வது சந்து பகுதியைச் சேர்ந்த சாகுல்ஹமீது மனைவி ஷாகிராபானு(26). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவியை துன்புறுத்தினார் சாகுல்ஹமீது. காவல் நிலையத்தில் ஷாகிராபானு புகார் கொடுத்ததால் ஷாகிராபானு மற்றும் அவரது சகோதரிகள் கவுசிக பானு, ஆசாத்பானு இருவரையும் சாகுல்ஹமீது தாக்கியதாக புகார். | மீதான வன்முறை | |
| 403. | 7.2.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகேயுள்ள சுக்காம்பட்டியைச் சேர்ந்த சீராளன் மனைவி தேவசேனா(41). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக தேவசேனா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 404. | 7.2.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு விஷாரம் புதுப்பேட்டை 3 வது தெருவைச் சேர்ந்த இப்ராகிம்(26) மனைவி ஷாமா(25) குழந்தைகள் ரகீம்(4) அர்ஷா(11/2). இப்ராகிம் சரியாக வேலைக்கு போகாததால் போதிய வருமானமின்றி தனது இரு குழந்தைகளையும் ஏரியில் வீசி கொலை செய்ய முயன்றபோது குழந்தைகள் பொதுமக்களால் மீட்கப்பட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 405. | 7.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை ஆதனூர்ரோடு பகுதியில் வசிப்பவர் ராஜகருப்பு(3) மனைவி அமிர்தவள்ளி(22). ராஜகருப்பு குடித்துவிட்டு மனைவியை துன்புறுத்தியதால் மனமுடைந்த அமிர்தவள்ளி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 406. | 7.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை வேம்பத்தூர் கற்பக விநாயகர்புரத்தைச் சேர்ந்த வசந்தா(18) வசந்தாவிற்கு தாய் தந்தை இல்லாததால் திருமணம் செய்ய வந்த மாப்பிள்ளை வீட்டார் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வசந்தாவை நிராகரித்தனர். மனமுடைந்த வசந்தா தூக்கிட்டுத் தற்கொலை. | | |
| 407. | 7.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருவாடானை சரகம் மங்களக்குடி அருகே உள்ள பெருவாக்கோட்டைச் சேர்ந்த முருகேசன் மனைவி வசந்தி. தனியாக வீட்டில் இருந்த வசந்தி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 408. | 7.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை பொள்ளாச்சி தாலுகா அம்பராம்பாளையத்தில் டாக்டர் ஆல்வா பாராமெடிக்கல் கல்வி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிட மாணவர்களுக்கு விஷூவல் மீடியா பயிற்சி அளிக்க அனுமதி பெற்றது. பயிற்சியாளர்களை தாட்கோ அலுவலர்களும் ஃபனா நிறுவனத்தினரும் சேர்ந்து பயிற்சிக்கான உபகரணங்கள் வழங்குதல், பயிற்சிக் காலம் முடிந்தபின் பயிற்சிக்குரிய தொகை வழங்கப்படும் என 12 நிபந்தனைகள் விதித்தன ஆனால் எந்த நிபந்தனையும் பின்பற்றப்படவில்லை. இப்பயிற்சியினை நடத்தும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட படிப்பை படிக்காதவர்கள் என இதுபோல் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்தியதில் சுமார் இரண்டுகோடி ஊழல் நடந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார். | ஊழல் | ஜனசக்தி |
| 409. | 7.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அந்தியூர் அருகே மைக்கேல் பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கூடுமையனூர் தலித் காலனியின் 200க்கும் மேற்பட்ட வீடுகளில் 500 பேர் வசிக்கின்றனர். இவர்கள் வழிபடும் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த குருசாமி ஆக்கிரமிப்பு செய்ததைத் தட்டிக்கேட்ட தலித் மக்களை குருசாமி அடியாட்களுடன் வந்து தாக்கியதோடு. பெண்களின் | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆடைகளை இழுத்து பானமங்கம் செய்ததாகவும், குழந்தைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் குருசாமி மீது தலித் மக்கள் புகார். | | |
| 410. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருவாதவூரில் மாணிக்க வாசகர் தெருவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி அருகே அரசு மதுக்கடை செயல்படுகிறது. காலையில் பள்ளி செல்லும் மாணவிகளை குடிமகன்கள் போதையில் கேலி செய்வதால், மாணவிகள் அவதிக்குள்ளாகின்றனர். மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி திருவாதவூரை சேர்ந்த ராஜசேகரன் நீதிமன்றத்தில் மனு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 411. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வைகையாற்றில் மணல் திருட்டு சம்பவங்கள் நடப்பதை, கட்டுப்படுத்த அதிகாரிகள் முன்வராததால், சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடிநீர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | தினமலர் |
| 412. | 8.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை சிட்லபாக்கம், எம்.எம்.டி.ஏ., நகர், சேகர் அவென்யூவைச் சேர்ந்த ரமேஷ் மனைவி கலாவதி(39) சுங்கத்துறையில் பணியாற்றி வந்தார். தியேட்டரில் படம் பார்க்கும்போது மர்ம நபர்கள் கலாவதியை அரிவாளால் வெட்டினர். வெட்டிய நபர்களை கைது செய்யக்கோரி கலாவதி போலீஸ்கமிஷனரிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினமலர் |
| 413. | 8.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் திருவாடானை ஏ. மணக்குடி பகுதி விவசாயிகள் 200 பேருக்கு அரசு, ஒரு ஏக்கர் நிலம் வழங்கியது. அதிகாரிகள், அதற்கான பாட்டாவையும் பயனாளிகளிடம் வழங்கினர். ஆனால் சம்பந்தப்பட்ட நிலத்தை அளந்து விவசாயிகளுக்கு பிரித்துத் தரவில்லை. இது குறித்து | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரிகளிடம் முறையிட்டும் பயனில்லை என விவசாயிகள் புகார். | | |
| 414. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கட்டயம்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகள் சுகன்யா(14). அதே பகுதியைச் சேர்ந்த கண்ணன்(25) சுகன்யாவை பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார். கண்ணன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 415. | 8.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி ஆயுதப்படை காவலர் ஜெயசீலன் பேருந்து நிறுத்தம் அருகே போதையில் பொதுமக்களிடம் தகராறு செய்ததாக புகார். ஜெயசீலன் சஸ்பெண்ட். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 416. | 8.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் சட்டஒழுங்கு, மகளிர் காவல்நிலையத்தில் பாதுகாப்பாக பாதுகாக்கப்பட வேண்டிய எப்ஐஆர் நகல்கள், காவலர்களின் மெத்தனத்தால் திண்டுக்கல் எஸ்பி அலுவலக மொட்டைமாடியில் தூக்கி வீசப்பட்டுள்ளன. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 417. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சாப்டூர் அருகே பொட்டல்பட்டியைச் சேர்ந்த சென்றாயபெருமாள் மனைவி ஆதிலெட்சுமி(27). கணவர் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த ஆதிலெட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 418. | 8.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கிணத்துக்கடவு நெகமம் பகுதியைச் சேர்ந்த லீலா(22)வை அதே பகுதியைச் சேர்ந்த நடராஜ் கடத்த முயன்றதாக லீலாவின் தந்தை புகார். நடராஜ் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் முயற்சி | தமிழ்சுடர் |
| 419. | 8.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வந்தவாசியை அடுத்த ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த எட்டு வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த ரமேஷ்(28) பாலியல் பலாத்காரம் செய்ததாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுமியின் பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 420. | 8.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள படிக்காசு வைத்தான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த குருவையா மகள் குருவத்தாய்(23). அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் காளிமுத்து குருவத்தாயை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல் பலாத்காரம் செய்ததாக குருவத்தாய் புகார். காளிமுத்து கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 421. | 8.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தாலுகா பில்லூரைச் சேர்ந்த பாண்டி(26) மனைவி லலிதா(24). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதாக லலிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 422. | 8.2.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் பேருந்து நிலையம் பகுதியை சுத்தம் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 25 துப்புரவுப் பணியாளர்கள் பணி செய்தனர். நிர்வாகம் 10 தொழிலாளர்களை வேலையில் இருந்து நிறுத்தியதை, கேட்டதற்காக மற்ற 15 தொழிலாளர்களுக்கும் வேலை மறுக்கப்பட்டதாகவும், கரூர் நகராட்சி ஆணையரின் விரோதப்போக்கைக் கண்டித்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம். | தலித் தொழிலாளர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 423. | 9.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த கௌதம் மனைவி மகா(23). கணவன் மனைவி தகராறில் மகா வண்ணாரப்பேட்டை போஜராஜன் நகரில் உள்ள அக்கா தேவி வீட்டில் தங்கியிருந்தார். பக்கத்து வீட்டில் வசிக்கும் காஜாமைதீன் மகாவை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்ததோடு மகாவை குடிசைக்குள் வைத்து தீ வைத்ததாக காஜாமைதீன் மீது புகார். காஜாமைதீன் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 424. | 9.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** போரூர் அடுத்த காரம்பாக்கத்தில் உள்ள போரார் கார்டன் முதல் பிரிவில் வசிப்பவர் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கனகா. வீட்டில் தனியாக இருந்த கனகாவை மர்ம நபர் சத்தியலால் தாக்கி அவரிடம் 6 பவுன் நகையை பறித்துச் சென்றதாக சிகிச்சை பெற்றவரும் கனகா புகார். | | |
| 425. | 9.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஆரணி அருகே சின்னம்முடி ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளி 1 முதல் 5ம் வகுப்பு வரை 72 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இப்பள்ளியில் ஒரு ஆசிரியர் மட்டுமே உள்ளதால் இவர்களின் படிப்பு பாதிக்கப்படுவதாக மாணவர்கள் புகார். கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்க வேண்டும். மற்றும் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பள்ளி இடத்தை அளக்க வேண்டும். பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி பலமுறை மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 426. | 9.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கூடுவாஞ்சேரி நந்திவரம் பகுதியைச் சேர்ந்த நீலகண்டன் மனைவி வேளாங்கண்ணி(26) இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ள நிலையில் கணவன் மனைவிக் குடும்பத் தகராறில் கணவர் கோபித்துக் கொண்டு போனதால் மனமுடைந்த வேளாங்கண்ணி தீக்குளித்துத் தற்கொலை முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | தினகரன் |
| 427. | 9.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கவுண்டம் பாளையம் ஜடிஜ நகர் பகுதியைச் சேர்ந்த அன்புராஜ் மகள் கிரிட்டில்டா(23). அன்புராஜின் தங்கை மகன் அருள்தாஸ்(28). இருவரும் காதலித்தனர். அருள்தாஸின் பெற்றோர் திருமணத்திற்கு மறுத்ததால் மனமுடைந்த கிரிட்டில்டா சாணி பவுடரை குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 428. | 9.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை போத்தனூர்கே.பி.கே. | பெண்கள் மீதான | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நகரைச் சேர்ந்த சிவசக்தி மனைவி ராஜேஸ்வரி(22) இத்தம்பதியினருக்கு 10 மாதக் குழந்தை உள்ளது. ராஜேஸ்வரி ஆசிரியை பயிற்சி படித்தார். தேர்வில் ஆங்கிலப்பாடத்தில் தோல்வி அடைந்ததால் மனமுடைந்த ராஜேஸ்வரி தூக்குப்போட்டுத் தற்கொலை. | வன்முறை & தற்கொலை | |
| 429. | 9.2.2011 | **நீலகிரி மாவட்டம்:** நீலகிரி கூடலூர் அருகே கேரளா செல்லும் சாலையில் நாடுகாணி கிராமம் அருகே அதிகாரிகள் நடத்திய வாகனசோதனையில் லாரியில் கேரளாவிற்கு கடத்த இருந்த 50 மூடைகளில் 2.5 டன் ரேசன்அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கொள்ளை | தினகரன் |
| 430. | 9.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தாலுகா பில்லூரைச் சேர்ந்த பாண்டி(26) மனைவி லலிதா(24). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதாக லலிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 431. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிறுத்தத்தில் 13 வயது சிறுமி நின்றிருந்தார். சந்தேகமடைந்த காவலர்கள் விசாரித்தபோது விருதுநகரில் இருந்து வருவதாக கூறினார். சிறுமியை பெற்றோரிடம் காவலர்கள் ஒப்படைத்தனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 432. | 9.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் பாம்பன் ஊராட்சியில் உள்ள முந்தல்முனை கிராமத்தில் 110 குடும்பங்கள் வசிக்கின்றனர். 1993ல் இருந்து மின்வசதி கேட்டு முறையிட தொடங்கிய இவர்களுக்கு 27 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை என இக்கிராம மக்கள் புகார். | அடிப்படை வசதியின்மை | தினமலர் |
| 433. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சயமநல்லூரைச் அடுத்த தோடநேரியைச் சேர்ந்த சிவக்குமார் மீது நாகமைலைபுதுக்கோட்டை காவல் | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் ஒரு கிரிமினல் வழக்கு நிலுவையில் உள்ளது. சிவகுமார் வழக்கு தொடர்பாக சப்–இன்ஸ்பெக்டர் சாந்தகுமாரை அணுகினார். வழக்கின் குற்றப்பத்திரிகை நகலில் இருந்து பெயரை நீக்கம் செய்வதற்காக சாந்தகுமார் ரூ. 7 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக சிவக்குமார் புகார். லஞ்சம் வாங்கிய சப்–இன்ஸ்பெக்டர் சாந்தகுமார் கைது. | | |
| 434. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் அதிகாலை வீட்டிற்கு முன்பு கோலமிடும் மற்றும் கடைக்குச் செல்லும் பெண்களிடம் நகைகளை பறித்துச் சென்ற திருச்சியைச் சேர்ந்த நகைபட்டறை அதிபர்மகாலிங்கம்(39), கார்த்திக்(21) பாண்டியராஜன்(27), முருகேசன்(37) சிக்கந்தனர்(28) ஆகிய 5 பேரை காவலர்கள் கைது செய்தனர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 435. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூரை அடுத்த கீழவளவைச் சேர்ந்த குண்டுமலை மகன் வாலமலை(29). ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தது தொடர்பான வழக்கில் நீண்ட நாட்களாக விசாரணைக்கு ஆஜராகாமல் வாலமலை தலைமறைவாக இருந்தார். அவரை கைது செய்ய நீதிபதிகள் உத்தரவு. வாலமலையை கைது செய்து காவலர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 436. | 9.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை மாவட்டம் தென்காசியில் உள்ள இந்தியன் வங்கியின் சார்பில் 2007–ம் ஆண்டு தனியார் நிறுவனங்களுக்கு விதிகளை மீறி முறைகேடாக கடன் வழங்கிய வங்கி அதிகாரி ஈஸ்வரன் கைது. | ஊழல் | தினத்தந்தி |
| 437. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை, உசிலம்பட்டி மாருதி நகரைச் சேர்ந்த தீபா. அய்யங்கோவில்பட்டியைச் சேர்ந்த லெனின்(29) தீபாவின் வீட்டிற்குள் | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நுழைந்து சில்மிஷம் செய்ய முயன்றதாக லெனின் மீது தீபா புகார். லெனின் கைது. | | |
| 438. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் ஹார்விபட்டியைச் சேர்ந்த கந்தசாமி என்ற சேகர்(42 மனைவி சுமித்ரா. திருப்பரங்குன்றம் பூங்காபகுதியில் இரும்பு, சிமென்ட் கடை நடத்தி வந்தார். ஹார்விபட்டி அதிமுக கவுன்சிலர் பாண்டுரெங்கன், திமுக கவுன்சிலர் தங்கம்பவுன்ராஜ், மற்றும் திமுக பிரமுகர் உசிலை சிவா ஆகியோரிடம் கடன் பெற்றிருந்தார். 3 பேரும் கந்துவட்டி கேட்டு மிரட்டியதால் மனமுடைந்த கந்தசாமி விஷம் குடித்துத் தற்கொலை. தனது கணவரின் தற்கொலைக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி சுமித்ரா புகார். | கந்துவட்டிக் கொடுமை | தினகரன் |
| 439. | 9.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சிவானந்தா காலனியைச் சேர்ந்த அருண் தினேஷ்(25) மனைவி மலர்க்கொடி(23). மலர்கொடிக்கு தன்ராஜ் என்பவருடன் கள்ளக்காதல். தன்ராஜுக்கும் மலர்கொடிக்கும் எற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த தன்ராஜ் மலர்கொடியை கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 440. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை டி.ஆர்.ஓ. காலனியில் உள்ள மேரிஆன் மெட்ரிக் பள்ளியில் நீதிபதி கோவிந்தராஜன் கமிட்டி அறிவித்த பள்ளிக் கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக பெற்றோர் புகார். கூடுதல் கட்டணம் செலுத்தாத மாணவ, மாணவியரை வகுப்பறையில் அனுமதிக்காத மெட்ரிக் பள்ளியை கண்டித்து பெற்றோர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 441. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் தலித் மாணவர்களுக்கு இலவச நோட்டுப் | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புத்தகம் வழங்குவதில் பல மாவட்டங்களில் ஊழல் நடைபெற்றுள்ளதாக புகார். இப்புகார்கள் குறித்து விசாரித்து 30 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என ஆதிதிராவிட நலத்துறை ஆணையருக்கு தாழ்த்தப்பட்ட ஆணையத்தின் இயக்குநர் இ. தசரதன் உத்தரவு. | | |
| 442. | 9.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவலர்கள் நடத்திய சோதனையில் 18 விடுதிகளுக்கும் சேர்த்து வசூலிக்கப்பட்ட பணம் மற்றும் கூடுதலாக வசூலிக்கப்பட்ட பணத்தையும் மாவட்ட அலுவலகத்தில் செலுத்துவதற்காக நின்றிருந்த ஆரல்வாய் மொழி விடுதி காப்பாளர் கணபதியிடமிருந்து (ரூ 11 ஆயிரத்து 25ஐ)யும், மற்றும் பிற்படுத்தப்பட்டடோர் அலுவலக கணக்கு அதிகாரி கணேச ராமசந்திரனிடம் இருந்து கணக்கில் காட்டப்படாத மற்றும் சரியான விளக்கம்அளிக்கப்படாத ரூ. 4720–யும் லஞ்ச ஒழிப்பு காவலர்கள் பறிமுதல் செய்தனர். | லஞ்சம் | ஜனசக்தி |
| 443. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அருகேயுள்ள பாடி பாக்கியத்தம்மன் நகரைச் சேர்ந்த கல்பனா(25). கடலூர் தொண்டமானுத்தம் கிராமம் வன்னியர் தெருவைச் சேர்ந்த சண்முகம்(28) இருவரும் காதலித்தனர். திருமணம் செய்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல். கல்பனா கர்ப்பம். சண்முகம் மீது கல்பனா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 444. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** திருவல்லிக்கேணி ஜாம்பஜார் பக்கிரி சாகிப் தெருவைச் சேர்ந்த பாண்டுரங்கன்(43) திருட்டு வழக்கில் ஜாம்பஜார் காவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் பாண்டுரங்கன் தூக்குப்போட்டுத் | சிறைக்கைதி மரணம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தற்கொலை. | | |
| 445. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** திருவெற்றியூர் அருகில் கவிபாரதி வித்யாலயா பள்ளியில்அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாக புகார். 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர் திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் தர்ணா போராட்டம். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 446. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை ராயபுரம் தொப்பை முதலியார் தெருவைச் சேர்ந்த பிரபாகரன் மகன் அனுஷ்குமார் மற்றும் அவரது நணபர்கள் முகமது, சுகன், மூவரும் டியூசன் சென்றவர்களைக் காணவில்லை என பெற்றோர் புகார். ராயபுரத்தில் மாயமான 3 மாணவர்களைக் காவலர்கள் கோயம்போடு பேருந்து நிறுத்தத்தில் கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 447. | 10.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை ரோடு வீரப்பம்பாளையம் பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரி(16) தனியார் பள்ளியில் பிளஸ் –1 படித்து வந்தார். வீட்டில் இருந்து வெளியே சென்ற புவனேஸ்வரியை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 448. | 10.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு விக்னேஸ் நகரைச் சேர்ந்த பானுமதி. தனது சகோதரி வீட்டிற்குச் செல்வதாக சென்ற பானுமதியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 449. | 10.2.2011 | **நீலகிரி மாவட்டம்:** கூடலூரை அடுத்த ஸ்ரீமதுரை கிராமம் போஸ்பாராவைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் ஜிஸ்யா(16) அங்குள்ள அரசு மேல் நிலைப் பள்ளியில் பிளஸ்–2 படித்து வந்தார். மாணவி நோட்டு கொண்டு வரவில்லை என ஆசிரியர் கண்டித்ததால் மனமுடைந்த மாணவி | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 450. | 10.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அருகே 46 புதூர் ஆணைக்கல்பாளையம் பகுதியைச் சேர்ந்த ரங்கசாமி(34). செட்டிபாளையத்தில் ஒரு கம்பெனியில் கூலி வேலை செய்தார். கம்பெனியின் முதலாளி பணம் காணாமல் போனதாக ரங்கசாமி மீது பொய் புகார். காவலர்கள் தாக்கியதாக ரங்கசாமி புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 451. | 10.2.2011 | **இராமேசுவரம் மாவட்டம்:** எமனேஸ்வரம் பகுதியில் ஒரு சமுகத்தைச் சேர்ந்தவரை மற்றொரு சமுகத்தைச் சேர்ந்தவர் சாதியைச் கூறி திட்டியதாக எழுந்த புகாரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பரமக்குடி காரைக்குடி நெடுஞ்சாலையில் சாலை மறியல் ஈடுபட்டவர்கள் 30 பேர் மீது வழக்குப் பதிவு. போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 452. | 10.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வாடிப்பட்டி மேடைபுதூரைச் சேர்ந்த உத்தராஜ் மனைவி நதியா(26). நதியா இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் குழந்தையை நதியா சரியாக பராமரிக்காததால் ஆத்திரமடைந்த உத்தராஜ் அரிவாள்மனையால் வெட்டியதாக நதியா புகார். உத்தராஜ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 453. | 10.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அரசு அனுமதியின்றி மணல் அள்ளப்படுவதாக புகார். அதிகாரிகள் சோதனையில் வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் அள்ளிக் கொண்டிருந்த லாரி மற்றும் வேன்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 454. | 10.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் புவியியல் மற்றும் சுங்கத்துறை துணை | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இயக்குநர் அலுவலகத்தில், லஞ்ச ஒழிப்பு காவலர்கள் நடத்திய சோதனையில் கணக்கில் காட்டப்படாத, ரூ. 29 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். துறை வாரியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தனர். | | |
| 455. | 10.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கோவையில் இருந்து வந்த பாசஞ்சர்ரெயிலை நாகர்கோவில் ரெயில் நிலைய வார்டில் நிறுத்தி இருந்தனர். அந்த ரெயிலை சுத்தம்செய்யும் பணி நடைபெற்றபோது ஒரு பெட்டியின் கழிவறையில் 35 வயது பெண் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 456. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை புளியந்தோப்பில் உள்ள மாநகராட்சி பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவி தேன்மொழி ஆசிரியர்கள் திட்டியதால் தற்கொலை. | வகுப்பறை வன்முறை | மாலைமலர் |
| 457. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அருகே சாலைக்கிராமம் பேருந்து நிலையத்தில் தார்சாலை அமைக்க டெண்டர் விடப்பட்டும் பணி துவங்குவதில் மாதக்கணக்கில் தாமதம். மண்சாலை புழுதியில் இருந்து தப்பிக்க பொதுமக்கள் மாஸ்க்(முகமூடி) அணியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது பொதுமக்கள் புகார். | சுகாதாரக்கேடு | தினகரன் |
| 458. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருவாடானை தாலுகா வெள்ளையபுரம் வடக்கு தெருவைச் சேர்ந்த முகமது இஸ்மாயில் மனைவி தவ்லத் நிஷா(33). தவ்லத் நிஷாவுக்கும அவரது அண்ணன் மனைவி சபுர்நிஷாவுக்கும் இடையே சொத்து தகராறு. சபுர்நிஷா தரக்குறைவாக பேசியதாக தவ்லத் நிஷா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 459. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அருகே சாலைக்கிராமத்தில் அரசு | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு ஆரம்பகோட்டை, முதுதுராமலிங்கபுரம், சாத்தனூர் பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் இலவச பாஸ் வழங்கப்பட்டுள்ளது. மதுரை வழித்தடத்தல் செல்லும் அரசு பேருந்துகளில் பயணிக்கும் மாணவ, மாணவிகள் பஸ்பாசை காண்பித்த பின்பும் இது போலி பாஸ் என மாணவர்களை டிக்கெட் எடுக்குமாறு கண்டக்டர் கூறியதாகவும் மறுத்த மாணவர்களை நடுவழியில் இறக்கிவிட்டு சென்றதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் புகார். | | |
| 460. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி நகரில் சாலையோர கடைகளில் சுகாதார மற்ற முறையில் கலப்பட உணவு பொருட்கள் விற்கப்படுகிறது. இறந்த காலாவதியான மாட்டிறைச்சியை உண்பதால் தொற்று நோய் பரவுவதுடன் உயிர்ப்பலி எற்படும் அபாயமும் நிலவுவதாக புகார். | கலப்பட உணவு | தினகரன் |
| 461. | 11.2.2011 | **கோவை, மாவட்டம்:** கோவை, காளப்பட்டி கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள். டீ கடையில் தலித் மக்களுக்கு என தனி டம்ளர் முறை கடைப்பிடிப்பதோடு, மாரியம்மன் கோவிலில் சாமி கும்பிட தலித் மக்களுக்கு அனுமதி மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கள் |
| 462. | 11.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை திருவிக நகர், டிடி தோட்டம், 3 வது தெருவில் வசிப்பவர் மஞ்சுளா(33) மகன் மோகன்(10). மோகனுக்கு விரைவீக்கம் ஏற்பட்டு பெரம்பூர் பந்தா கார்டன், மெயின் தெருவில் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தனர். மருத்துவரின் தவராறன சிகிச்சையால் மோகன் இறந்ததாகவும் அதற்குக் காரணமாக மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி | மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவமனைவளாகத்தில் உறவினர்கள் போராட்டம். | | |
| 463. | 11.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அடுத்த காரப்பாக்கம் பாலத்துக்கு கீழ் தண்ணீரில் பாலித்தீன் கவரில் 30 முதல் 35 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் கிடந்ததது. இது குறித்து காவலர்கள் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 464. | 11.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஆவடி காந்திநகர் ராமானுஜம் தெருவைச் சேர்ந்த வர்கீஸ் மனைவி மாரியம்(34) ஐசிஎப் ஊழியர். வேலை முடிந்து வீட்டிற்கு வந்துக் கொண்டிருந்த மரியத்தை வழியில் மர்ம நபர்கள் தாக்கி நகையை பறித்துச் சென்றதாக மரியம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 465. | 11.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** தரமணி பிள்ளையார் கோவில் தெருவில் வசித்த ரீட்டா(20). காய்ச்சலில் பாதிக்கப்பட்ட ரீட்டா மருத்துவர்கள் சீட்டு இல்லாமல் மருந்துக் கடையில் காய்ச்சலுக்கு மாத்திரரை வாங்கி சாப்பிட்டார். கலாவதியான மாத்திரை சாப்பிட்தால் ரீட்டா மரணம். | போலி மருந்துகள் | தினகரன் |
| 466. | 11.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** கல்பாக்கம் இந்திரா காந்தி அணுஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி லோகையன் மனைவி விஜயா(50). உடல் நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த விஜயா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 467. | 11.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** கூடுவாஞ்சேரி அருகேயுள்ள காரணைப்புதுச்சேரி கிராமத்தைச் சேர்ந்த நீலகண்டன் மனைவி வேளாங்கண்ணி(26). கணவன் மனைவி குடும்பத் தகராறு காரமணாக நீலகண்டன் தலைமறைவு. நீலகண்டனின் உறவினர்கள் தகாத வாத்தைகயால் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திட்டியதால் மனமுடைந்த வேளாங்கண்ணி தீக்குளித்துத் தற்கொலை. | | |
| 468. | 11.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ரத்தினபுரியைச் சேர்ந்த கமலா(49) மகள் சுதா(14). கமலா கணவனை விட்டு பிரிந்து கட்டிட வேலை செய்து வந்தார். கமலாவுக்கு கட்டிட மேஸ்திரியுடன் தொடர்பு. சுதாவை மேஸ்திரியுடன் உல்லாசமாக இருக்குமாறு தாய் அடித்து துன்புறுத்தியதாக தாய் மீது சுதா கமிஷனரிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 469. | 11.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ராமநாதபுரத்தைச் சேர்ந்த சந்தோஷ்குமார் மனைவி சித்ரா(22). திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆன நிலையில் சித்ரா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 470. | 11.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை வடவள்ளி காமராஜபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணி(28) மனைவி ஜெயலட்சுமி(25). வீட்டில் ஒரு இளம்பெண்ணை தங்க வைத்து விபச்சாரம் நடத்தியதாக இருவரும் கைது. விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்ணுக்கு ஒரு கை ஓடிந்தநிலையில் அந்தப் பெண்ணை மகளிர் விடுதியில் ஒப்படைத்தனர். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 471. | 11.2.2011 | **பொள்ளச்சி மாவட்டம்:** பொள்ளாச்சி அருகே உள்ள எரிசனம்பட்டியைச் சேர்ந்த நடராஜன் மகன் ராஜமாணிக்கம்(28) தனது வீட்டிருகே உள்ள 12 வயது சிறுமியை பாலபங்கப்படுத்த முயற்சி. சிறுமியின் அலறல் கேட்டு பொதுமக்கள் சிறுமியை மீட்டனர். ராஜமாணிக்கம் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 472. | 11.2.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் வேம்படித்தாளம் அருகே திருவளிப்பட்டி மேட்டுக்காடு பகுதியைச் சேர்ந்த வள்ளி. வள்ளி வீட்டின் அருகே இருந்த கிணற்றில் விழுந்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 473. | 11.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அலங்காநல்லூர் | வகுப்பறை வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெள்ளிமலையான்குன்று பகுதியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 40ஆண்டுகளாக செயல்படுகிறது. இப்பள்ளியின் சத்துணவுக் மேற்கூறை இடிந்து ஓராண்டாகியும் இன்னும் சீரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக மாணவர்கள் புகார். | | |
| 474. | 11.2.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே கிராமத்தில் வயிற்றுப்போக்கு நோய் காரணமாக 20க்கும் மேற்பட்டோர் பாதிப்பு. மூதாட்டி காமாட்சி(60) வயிற்றுப்போக்கு நோயால் இறந்ததாக புகார். | சுகாதாரக்கேடு | தினத்தந்தி |